மின்னஞ்சல் மிகமிக அவசரம்

சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை.08

ந.க.எண். 1539 /அ6/2024 நாள் 18.03.2024

பொருள் : பள்ளிக் கல்வி - கல்வி உதவித் தொகை திட்டம் 2023 - BC/MBC/DNC, 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவியர்களின் விவரம் EMIS Portal ல் சரியாக பதிவேற்றம் செய்யக் கோருவது மற்றும் ஆதாருடன் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்கு துவங்குவது – அறிவுரை வழங்குவது - தொடர்பாக.

பார்வை : ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை அவர்களின் கடிதம் ந.க.எண். டி2/5376/2022-1 நாள்.18.02.2024.

******

பார்வையில் காணும் கடிதத்தில் பள்ளிப் படிப்பு கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் 2022-23 ஆம் கல்வி ஆண்டில் அரசு / சென்னை / ஆதிதிராவிடர் பள்ளிகளில் 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயின்ற மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்க பள்ளி கல்வித் துறையின் EMIS Portal லிருந்து தகுதியான BC/MBC/DNC பிற்படுத்தப்பட்ட / மிகப் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினர் இன மாணவிகளின் விவரங்கள் வாயிலாக ஆதாருடன் இணைக்கப்பட்ட மாணவர்களின் வங்கி கணக்கில் நேரடியாக உதவித்தொகை செலுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது , இப்பணியினை சிறப்பாக செயல்படுத்தும் விதமாக பார்வை 1 ல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள பின் வரும் வழிமுறைகளை பின்பற்றுமாறு சார்ந்த பள்ளித்தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

<u>தலைமையாசிரியருக்கான திட்ட செயல் முறைகள்</u>

- வங்கி கணக்கு இல்லாத மாணவிகளுக்கு ஆதார் இணைக்கப்பட்ட வங்கி கணக்கினை துவங்க வேண்டும்,
- மாணவிகளின் வங்கி கணக்கில் ஆதார் எண்ணை இணைத்த பின் வங்கி கணக்கில் Direct Benefit Transfer (DBT) ஐ enable செய்ய வங்கியில் அறிவுறுத்த வேண்டும்.
- 20223 ஆம் ஆண்டிற்கான ekyc unverified மாணவிகளின் விவரங்களை இல்லம் தேடி கல்வி திட்டத்தின் தன் ஆர்வலர்கள் உதவியுடன் face Authentication மூலம் நம் மாணவியர்களின் ஆதார் அட்டையில் உள்ள விவரங்கள் அடிப்படையில் EMIS ன் தரவுகளில் update செய்ய வேண்டும்.
- மாணவிகளின் கைரேகை மற்றும் விழிப்பதிவு செய்யப்பட்டு ஐந்து ஆண்டுகளுக்கு மேல் இருக்கும் பட்சத்தில் Bio authentication செய்ய வேண்டும். அவ்வாறு Bio authentication செய்ய வேண்டிய மாணவிகளுக்கு தங்கள் மாவட்டத்தில் உள்ள ELCOT மூலம் camp நடத்தி bio authentication செய்ய வேண்டும்.

Scanned with OKEN Scanner

- Ekyc unverified மற்றும் NPCI failure இல் நிலுவையிலுள்ள மாணவிகளின் விவரங்களை பள்ளியில் உள்ள notice board இல் ஒட்டி மாணவிகளுக்கு வங்கி கணக்கினை சரி செய்ய அல்லது ஆதார் விவரங்களை சரி செய்ய அவர்தம் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
- மேற்படி பணிகளை மேற்கொள்ள 10 மாணவிகளுக்கு ஒரு ஆசிரியர் விதம் தொடர்பு அலுவலராக( nodal officer) நியமித்து மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை கிடைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
- பள்ளியில் இருந்து மற்றும் இதர காரணங்களால் பள்ளிக்கு வராத மாணவிகளின் விவரங்களை ஒவ்வொரு பள்ளி தலைமை ஆசிரியரும் தனி கவனம் கொண்டு அதன் விவரத்தை தலைமை ஆசிரியர் கையொப்பத்துடன் முதன்மை கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைத்திட தெரிவிக்கப்படுகிறது .

இணைப்பு

1 NPCI Inactive மாணவிகள் வாரியாக மற்றும் பள்ளி வாரியான விவரப்பட்டியல் 18.03.2024 ன் படி

2 EKYC unverified மாணவிகள் வாரியாக மற்றும் பள்ளி வாரியான விவரப்பட்டியல் 18.03.2024 ன் படி

இரா.சி.பிரியா 18/3/24

முதன்மைக் கல்வி அலுவலர்

18.03.23

சென்னை

பெறுநர்

1. கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை-03, தொடர் நடவடிக்கையின் பொருட்டு ,
2. சென்னை மாவட்டம் மாவட்டக்கல்வி அலுவலர்கள் (இடைநிலை) தென் சென்னை மற்றும் வட சென்னை, தொடர் நடவடிக்கையின் பொருட்டு
3. அரசு பள்ளித்தலைமையாசிரியர்கள், சென்னை மாவட்டம் , தக்க நடவடிக்கையின் பொருட்டு ,

நகல்

1. துணை ஆணையர், (கல்வி )பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. சென்னை-06, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

Scanned with OKEN Scanner